# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 31.07.2023 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

# கூட்டப்பொருள்

<table>
<tr><td>1</td><td>நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க தமிழ்நாடு அரசு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்: 98 நாள்: 13.07.2023ல் உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்குப் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பதவி</th><th>தொகை(ரூ)</th></tr>
<tr><td>1</td><td>நகர்மன்றத் தலைவர்</td><td>15000/-</td></tr>
<tr><td>2</td><td>நகர்மன்றத் துணைத்தலைவர்</td><td>10000/-</td></tr>
<tr><td>3</td><td>நகர்மன்ற உறுப்பினர்</td><td>5000/-</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>
ந.க.எண்: 1199/22/சி3<br>
தீர்மான எண்:630<br>
தீர்மானம் : பார்வையிட்டு பதிவுசெய்யப்பட்டது.</td></tr>
<tr><td>2</td><td>நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத்துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க உத்திரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத்துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கொண்டு வந்துள்ள மன்றப்பொருள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
தீர்மான எண்:630<br>
தீர்மானம் : பார்வையிட்டு பதிவுசெய்யப்பட்டது.</td></tr>
<tr><td>3</td><td>இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் 2015 முதல் 2018 வரை தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியது தொடர்பாக திரு.முகமது ரபீக் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குஎண் WP.No 8027/2016 ல் வழக்கு தொடர்ந்தார்<br>
இவ்வழக்கின் 6.01.2023ம் தேதிய தீர்ப்பாணையில் ஏல/ஒப்பந்த காலம் 2015 முதல் 2018 வரை ஆகும். எனவே, ஒப்பந்தக் காலம் முடிவடைந்த நிலையில் மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்க இயலாது என தெரிவிக்கப்பட்டு மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஏல இனமானது நகராட்சி பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு புதிதாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் ஏல விளம்பரம் செய்ய ஏற்படும் உத்தேச செலவு ரூ.1,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்: 5403/2014/அ1<br>
தீர்மான எண்:632<br>
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | |
|---|---|
| 4 | 2023-2024ம் ஆண்டிற்கான சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி, குடிநீர்கட்டணம், கடைவாடகை போன்ற இனங்களை நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை 100 % வசூல் செய்யும் பொருட்டும் இதர அறிவிப்புகள் பொது மக்களுக்கு சென்றடையும் வகையில் இந்நிதியாண்டில் ஆட்டோவில் விளம்பரம் செய்யவும், மேலும் இதர செலவினங்களுக்காகவும், உத்தேச செலவினமாக ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>ந.க.எண்:1347/23/அ2<br>தீர்மான எண்:633<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 08 காலியிடவரி விதிப்பு எண் 074/010/01225 க்கு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 1.10.2017 முதல் சொத்துவரி விதிப்பு எண் 074/008/900984 ல் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட காலியிட வரி விதிப்பு எண் 074/010/01225 ஐ ரத்து செய்ய (write off ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>ந.க.எண்:1323/23/அ2<br>தீர்மான எண்:634<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 6 | இந்நகராட்சிக்கு சொந்தமான பெட்டிக் கடை க.எண் 5 திரு.அவினாசிலிங்கம் உரிமத்தை புதுப்பிக்கப்படாததால் இக்கடையினை ஏலத்திற்கு வைக்கப்பட்டது. 28.07.2016 அன்று நடைபெற்ற ஏலத்தில் அதிகபட்ச ஏலக் கேள்வி கோரிய திரு.முபாரக் அலி என்பவருக்கு கடையை ஒப்படைக்கும் போது திரு.அவினாசிலிங்கம் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார் (வழக்கு எண்: 28538/16) திரு.அவினாசிலிங்கம் தொடர்ந்து கடை நடத்தி வந்தார் இவ்வழக்கின் தீர்ப்பு 26.04.2021ம் தேதி நகராட்சிக்கு சாதகமாக ஏலக்காலம் முடிவடைந்தது என வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்நிலையில் திரு.கார்த்திக் என்பவர் திரு அவினாசிலிங்கம் திரு.முபாரக் அலி மற்றும் நகராட்சி ஆணையாளர் மீது வழக்கு தொடர்ந்தார்(வழக்கு எண் O.S.No.23/2017) இவ்வழக்கின் தீர்ப்பு 20.06.2022ம் தேதி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது இது குறித்து நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு கருத்துரை வழங்க கோரி தெரிவிக்கப்பட்து. வழக்கறிஞர் தனது கருத்துரையில் திரு.முபாரக் அலி அவர்களுக்கு உரிமம் வழங்க 28.07.2016 முதல் 3 ஆண்டுக்கு ஒரு முறை 2019ல் 15% உயர்வு செய்தும் 2022ல் 15% உயர்வு செய்தும் மொத்தம் 30 % உயர்வு செய்து வழங்கலாம் என தெரிவித்தார். எனவே, திரு.முபாரக் அலி அவர்களுக்கு 30 % உயர்வு செய்து ரூ.14680/-க்கு மேற்கண்ட பெட்டிக்கடை க.எண் 5ற்கு உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 2710/16/அ1<br>தீர்மான எண்:635<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 7 | இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் இதர பணிகள் குறித்து விளம்பரம் செய்யப்பட்டது.<br><br>1.மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.08.2022 அன்று புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் முடிவுற்ற பணிகள் துவக்கி வைத்தல் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை துவக்கி வைத்தது குறித்து பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அரசு நிர்ணயித்த விலையில் (DIPR rate) 24.08.2022 (Graphic Arts Industries) என்ற நிறுவனம் மக்கள் முகம் நடுநிலை நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது.2.மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்ட வ.உ.சி. மைதானத்தில் 19.05.2022 அன்று கண்காட்சி மற்றும் அரசின் ஓராண்டு சாதனை விளக்க ஓவியக் கண்காட்சி துவக்கி வைத்ததை தீக்கதிர் நாளிதழில் |

பிரசுரம் செய்யப்பட்டது3.இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பணிக்காக Tender Notice பொறியியல் பிரிவு, Internal Plumbing விளம்பரம் (Bright Advertising) என்ற நிறுவனத்தின் மூலம் நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டது.4. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (untited Grants ) 22-23 ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு தின செய்தி என்ற நாளிதழில் Nidus Advertising & Marketing என்ற நிறுவனம் மூலம் பிரசுரம் செய்யப்பட்டது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | Graphic Arts Industries | 25200 |
| 2 | Theekathir Daily | 45150 |
| 3 | Bright Advertising | 151516 |
| 4 | Nidus Advertising & Marketing | 59746 |

அலுவலக் குறிப்பு ; மேற்காணும் பட்டியயில் உள்ள நிறுவனங்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது

தீர்மான எண்:636

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

8

மேட்டுப்பளையம் நகராட்சியில், நகராட்சி ஆணையர் அவர்களின் குடியிருப்பு மராமத்து பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சத்திற்கு ஆகும் இச்செலவினத்தை நகராட்சியில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொண்டதினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் : 580/2023/இ1

தீர்மான எண்:637

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

அ.இ.அ.தி.மு.க. நகர் மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

9

மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29 சபரி பாலாஜி நகர் மற்றும் வார்டு எண் 30 நியூ அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் முறையாக குடிநீர் விநியோகம் செய்ய சாந்தி நகர் மெயின் சாலையில் அமைந்துள்ள 8” குடிநீர் விநியோக குழாயிலிருந்து 3” குடிநீர் குழாய் சுமார் 280மீ நீளத்திற்கு அமைத்து மேற்படி பகுதியிலுள்ள குடிநீர் குழாயுடன் இணைத்து இப்பகுதிகளுக்கு குடிநீர் வழுங்கலாம். இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக் க குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்:638

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

10 இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேகரமாகின்ற மக்கும் குப்பைகளை உரம் தயாரிக்க நுண்ணுயிர் தெளிப்பான் (EM Solution) தேவைப்படுவதால் அதற்கு தேவையான மூலப்பொருட்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | G.K.S.சேபதி கிட்டாம்பாளையம் மேட்டுப்பாளையம் | 85000/- |
| 2 | M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் L88ஹசிங்யூனிட் மேட்டுப்பாளையம் | 79500/- |

இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 628/2023/எச்1

தீர்மான எண்:639

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

11 இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN 40S 9846 TataAce ல் உள்ள பழுதுகளை நீக்கும் பணிக்கு 27.06.2023 ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் கருங்கல்பாளையம் ஈரோடு | 1,09,900/- |
| 2 | முருகன் ஆட்டோஸ், ஆட்டோ நகர், மேட்டுப்பாளையம் | 1,09,500/- |

இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள முருகன் ஆட்டோஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பொதுச் சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

ந.க.எண் 4630/2022/எச்1

தீர்மான எண்:640

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12 இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN 40F 2273 ல் உள்ள பழுதுகளை நீக்கும் பணிக்கு 27.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | முருகன் ஆட்டோஸ், ஆட்டோ நகர், மேட்டுப்பாளையம் | 2,44,200/- |
| 2 | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் கருங்கல்பாளையம் ஈரோடு | 2,44,900/- |

இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள முருகன் ஆட்டோஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பொதுச் சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் 5133/2022/எச்1

| | |
|---|---|
| | தீர்மான எண்:641<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 13 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN 40C 551 டிப்பர் லாரியில் உள்ள பழுதுகளை நீக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. |

| வ.எண் | ஒப்பந்ததரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் கருங்கல்பாளையம் ஈரோடு | 2,,49,800/- |
| 2 | முருகன் ஆட்டோஸ், ஆட்டோ நகர், மேட்டுப்பாளையம் | 2,49,000/- |

இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள முருகன் ஆட்டோஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பொதுச் சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம் ந.க.எண் 5058/2022/எச்1

தீர்மான எண்:642

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

14 மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2023-2024ன் கீழ்க்கண்ட பணிகளுக்கு 18.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்தாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளை நீர் மூழ்கி மோட்டார்கள் பழுது அகற்றுதல், பழுதான சின்டெகஸ் டேங்குகள் மாற்றுதல் மற்றும் பழுதான பைப்லைன்களை மாற்றுதல் ஆகிய பணிகளை செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திருவாளர் ஆலயம் போர்வெல் | 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எம்.வேலுசாமி | 4.85% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பம்பிங் மெயின் பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திரு.எம்.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.சி.நாகராஜ் | 4.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | தலைமை நீரேற்று நிலையத்திற்கு படிகாரம் (Sulphate of alumina ferric ) வாங்குதல் | ரூ.3.60 இலட்சம் | திருவாளர். அல்கம் இண்டஸ்ட்ரீஸ் | 0.12% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் General Marketing Enterprises | 6.08% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான குளோரின் வாயு சிலிண்டரில் நிரப்புதல் | ரூ.5.00 இலட்சம் | திருவாளர். அல்கம் இண்டஸ்ட்ரீஸ் | 0.09% மதிப்பீட்டிற்கு குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திருவாளர் General Marketing Enterprises | 5.12% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5 | தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பங்களாமேடு நீருந்து நிலையத்திற் உள்ள 125HP, 251HP. ஆகிய பம்புகளில் பழுது நீக்கி 30HP மராமத்து பணிகள் செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திருவாளர். அல்கம் இன்டஸ்ட்ரீஸ் | 0.11% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருலாளர்.ஸ்ரீ பவர் இன்ஜினியர்ஸ் | 5.51% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்காணும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.582/2023/இ1

தீர்மான எண்:643

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

15 மேட்டுப்பாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் நகராட்சி உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Decantling Facility அமைத்தல் (Type II ) பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதையடுத்து 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் நகராட்சி உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Decantling facility அமைத்தல் (Type II) பணி | ரூ.16.00 இலட்சம் | திருவாளர் V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் G.K.S சேதுபதி | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் V.R.K கன்ஸ்டரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக க் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: 580/2023/இ1

தீர்மான எண்:644

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

16 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண் 8 பெருமாள் கவுண்டர் வீதி, SM நகர் ஆகிய பகுதியில் குடிநீர் சமச்சீராக விநியோகம் செய்ய இயலாத காரணத்தினால் அப்பகுதியில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே, அப்பகுதியில் புதிய Sintex Bed மூலம் பகிர்மானக் குழாய் அமைக்கவும் மற்றும் இதர குடிநீர் பணிகளுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4.80 இலட்சம்

ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்காணும் பணியின் குடிநீர் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 582/2023/இ1

தீர்மான எண்:645

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

17 தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார்கள் இயக்க மின்பளு (M.D)(Maximum-Demond) 350 KVA பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டார் இயங்குவதற்கு சீரான மின்சாரம் இருப்பதற்காக 134 KVAR Capacitor பொருத்தப்பட்டுள்ளது. இதில் 70 KVAR Capacitor பழுதடைந்துள்ளதால் மின்பளு (M.D) அதிகமாகிறது. இதனால் மின் கட்டணமும் உயர வாய்ப்புள்ளது. ஆகையால் பழுதடைந்துள்ள 70KVAR Capacitor புதிதாக மாற்றுவதற்கு மற்றும் உதிரி சாமான்கள் வாங்குவதற்கும் ஆகும் தோராய செலவினம் ரூ.9.50 இலட்சம் ஆகும் இச்செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மான எண்:646

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

18 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 29, மணிநகர் நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் புதியதாக கட்டிய காவலர் அறைக்கு வர்ணம் பூசுதல் மற்றும் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.1.20 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 582/23/இ1

தீர்மான எண்:647

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

19 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்ப்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டதையடுத்து இப்பணிகளை மேற்கொள்ள தல ஆய்வு செய்தல், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறுதல் ஆகிய பணிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசகர் நியமித்து மேற்கொள்ள 28.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண் 3 சிறுமுகை சாலை பகுதியில் உள்ள காலி இடத்தில் (T.S.No.137) புதிய வாரச் சந்தை கட்டுதல் பணிக்கு தொழில் நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | ரூ.2.50 இலட்சம் | திருவாளர்.Glency Docmra Consultants India Pvt.Ltd. | 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண் 5 பழைய நகராட்சி அலுவலகம் பின்புறம் (T.S.No. from 206 to 216) உள்ள சிதிலமடைந்த பழைய மீன் சந்தை கட்டித்தை இடித்து புதிய மீன் சந்தை கட்டிடம் கட்டுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | ரூ.5.70 இலட்சம் | திருவாளர். Glency Docmra Consultants India Pvt.Ltd. | 0.08% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண் 16 அண்ணாஜிராவ் ரோடு பகுதியில் (T.S.No.28344) உள்ள தினசரி சந்தை மற்றும் சிதிலமடைந்த பழைய இறைச்சி கடைகளை இடித்து புதிய தினசரி சந்தை மற்றும் இறைச்சி கடைகள் கட்டுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | ரூ.8.60 இலட்சம் | திருவாளர் Glency Docmra Consultants India Pvt.Ltd. | 0.05% மதிப்ட்டிற்கு குறைவு |
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சி ஜவஹர்லால் பேருந்து நிலையத்தில் (T.S.No.55, 56) உள்ள சிதிலமடைந்த பழைய கட்டிங்களை இடித்து புதிய வணிக வளாகம் கட்டுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | ரூ.10.65 இலட்சம் | திருவாளர் Glency Docmra Consultants India Pvt.Ltd. | 0.07% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 5 | மேட்டுப்பாளையம் நகராட்சி சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்திற்கு விளாமரத்தூர் பகுதியிலிருந்து தூய்மையான குடிநீரை எடுத்து செல்லுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | ரூ.28.40 இலட்சம் | திருவாளர் Glency Docmra Consultants India Pvt.Ltd. | 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**:648

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

20 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 8,9,20,24,25,33,28, ஆகிய பகுதிகளில் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் . அப்பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுற்றியுள்ள தெருக்களுக்கு விநியோகம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும் இச்செனவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில்

மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 582/2023/அ1

தீர்மான எண்:649

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

21 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்கள் 22,10,19,29 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் . அப்பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுற்றியுள்ள தெருக்களுக்கு விநியோகம் செய்ய தோராய செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும் இச்செனவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 582/2023/இ1

தீர்மான எண்:650

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

22 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 4,9,13 மற்றும் 23 ஆகிய பகுதிகளில் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுற்றியுள்ள தெருக்களுக்கு விநியோகம் செய்ய தோராய மதிப்பீடு ரூ.8.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 582/2023/இ1

தீர்மான எண்:651

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

23 மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு ஓர் ஆண்டிற்கு 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் மற்றும் தூய்மைப்பணியாளர்களுக்கு துப்புரவு பணியினை மேற்கொள்ள கீழ்க்கண்ட தளவாடப் பொருட்கள் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்க ஒரு வருடத்திற்கு தேவையான கீழ்க்கண்ட பொருட்கள் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.5,00000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தளவாட பொருட்கள் | கோட்டம் எண் I | கோட்டம் எண் II | கோட்டம் எண் III | கோட்டம் எண் IV | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சீமார் குச்சி யுடன் | 60 | 60 | 50 | 50 | 240 |
| 2 | பூசீமார் | 10 | 10 | 0 | 0 | 20 |
| 3 | கால்வாய் மண்வெட்டி | 5 | 5 | 5 | 5 | 20 |
| 4 | மூன்று பல் கொத்து | 5 | 5 | 5 | 5 | 20 |
| 5 | அரிவாள் | 4 | 4 | 4 | 4 | 16 |
| 6 | தட்டுக்கூடை | 10 | 10 | 10 | 10 | 40 |
| 7 | கையுறை | 132 | 48 | 72 | 150 | 402 |
| 8 | மழைக்கோட்டு | 22 | 8 | 12 | 25 | 67 |
| 9 | பிளீச்சிங் பவுடர் | 2 டன் | | | | |
| 10 | சுண்ணாம்பு தூள் | 6 டன் | | | | |

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2695/2023/எச்1

தீர்மான எண்:652

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

24 இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு 2023ம் ஆண்டிற்கான தீபாவளி பண்டிகைக்கு சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்க வேண்டி இருப்பதால் அதனை தமிழ்நாடு கதர்கிராம தொழில் வாரியம், ஈரோடு என்ற அரசு நிறுவனத்தில் சீருடைகள், காலணிகள் வாங்கவும், மற்றும் பணியாளர்களுக்கு சீருடை தைக்க தையல் கூலி வழங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 2,75,600/-க்கும் அரசு நிறுவனம் என்பதால் பணி உத்தரவு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| சீருடை | : 15,200 |
| தையல்கூலி | : 52,200 |
| காலணிகள் | : 71,400 |
| மொத்தம் | : 275600 |

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:653

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

25 நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 3088/2022/தூ.இ.நி1, நாள்.23.02.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, மேட்டுப்பாளையம் நகராட்சியில் இயங்கி வரும் உரக்கிடங்குகளான சிராஜ் நகர் மற்றும் நந்தவனம் (MCC) இவ்விரு உரக்கிடங்கிலும் சேகராமகின்ற மக்கும் குப்பைகளை கொண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உரம் தயாரித்து "செழிப்பு" என்ற பெயரில் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வேண்டி உள்ளதால், அதற்கு இயற்கை உரமான (EM SOLUTION) நுண்ணுயிர் தெளிப்பான் தயாரிப்பதற்காக ஒரு வருடத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு 02.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை % |
|---|---|---|
| 1 | திருவாளர். ஜி.கே.எஸ் சேதுபதி ஒப்பந்ததாரர், கிட்டாம்பாளையம், மேட்டுப்பாளையம். | ரூ. 85,000 /- |
| 2 | திருவாளர். எம் 3, இன்ஜினியரிங் அண்டு கன்ஸ்ரக்ஷன்ஸ் யூனிட், காரமடை ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ. 79,500 /- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்எம்3, இன்ஜினியரிங் அண்டு கன்ஸ்ரக்ஷன்ஸ் யூனிட், காரமடை ரோடு, மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்:654

தீர்மானம் : வரிசை எண் 10ல் எற்கனவே இது குறித்து மன்றப் பொருள் சேர்க்கப்பட்டுள்ளதால் இப்பொருள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

26 இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் உள்ள கீழ்க்கண்ட 89 சொத்துவரி விதிப்புகள் மாதாந்திரப்பட்டியலில் வைத்து நீக்கம் செய்யாதது மற்றும் இடிந்த நிலையில் உள்ள ஆளில்லா குடியிருப்புகள் ஆகும் என வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர். எனவே கீழ்க்கண்ட வரி விதிப்புகளை தள்ளுபடி செய்ய (Write off) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 2737/2023/அ2

தீர்மான எண்:655

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 27 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் உள்ள கீழ்க்கண்ட 90 காலியிட வரி விதிப்புகள் மாதாந்திரப்பட்டியலில் வைத்து நீக்கம் செய்யாதது மற்றும் காலியிட வரிவிதிப்புகள் சொத்துவரி விதிக்கப்பட்டு காலியிட வரிவிதிப்பு இரத்து செய்யப்படாமல் கேட்பு மீண்டும் எழுப்பப்பட்டு வந்தவை மற்றும் கண்டறிய முடியாத வரிவிதிப்புகள் ஆகும் என வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர். எனவே கீழ்க்கண்ட வரி விதிப்புகளை தள்ளுபடி செய்ய (Write off) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 2737/2023/அ2<br>தீர்மான எண்:656<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 28 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் உள்ள கீழ்க்கண்ட 42 தொழில்வரி விதிப்புகள் மாதாந்திரப்பட்டியலில் வைத்து நீக்கம் செய்யாதது மற்றும் கடைகள் காலிசெய்யப்பட்டுள்ளதால் கேட்பு நீக்கம் செய்யப்பட்டவை நீக்கம் செய்யப்பட்ட வரிவிதிப்புகளின் கேட்பு மீண்டும் வரப்பெற்றுள்ளது. கடைகள் காலி செய்யப்பட்டுள்ளதால் நடப்பு மற்றும் நிலுவை கேட்பினை நீக்கம் செய்யப்பட வேண்டும் என வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர். எனவே கீழ்க்கண்ட வரி விதிப்புகளை தள்ளுபடி செய்ய (Write off) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 2737/2023/அ2<br>தீர்மான எண்:657<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 29 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 18,30 மற்றும் 33 ஆகிய வார்டுகளில் குடிநீர் சரியாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய முடியாத காரணத்தினால் அப்பகுதிகளுக்கு பகிர்மானக் குழாய்களில் Interlink அமைத்து சீரான குடிநீர் வழங்க குழாய்களுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4.30 இலட்சம் ஆகும் இச் செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 582/2023/இ1<br>தீர்மான எண்:658<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 30 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் ஜவஹர்லால்நேரு பேருந்து நிலைய கட்டிடம், மீன்சந்தை கட்டிடம் மற்றும் தினசரி சந்தை கட்டிடங்களின்உறுதித் தன்மையை ஆராய்ந்து குறிப்பு வழங்கியதிற்கு முதல்வர், அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி கோவை அவர்களுக்கு உத்தேச கட்டணம் ரூ.3.20 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.2135/2023இ1<br>தீர்மான எண்:659<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 31 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் தற்போது பாதாள சாக்கடை அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது.<br>இத்திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையில்(NH181) கழிவு நீர் குழாய் அமைக்கப்படாமல் இருந்தது தற்போது மேட்டுப்பாளையம் நகராட்சி மூலம் வீட்டு இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வீட்டு இணைப்பு பணிகள் நடைபெற்று வரும் தருணத்தில் தேசிய நெடுஞ்சாலையில் பணிகள் நடைபெறாத நிலையில் இயந்திர இறங்கு குழிகள் Over Flow ஆகவும் அதன் மூலம் சுகாதார சீர்கேடு ஏற்படும். இதன் அடிப்படையில் கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையின் படி வருவாய் கோட்ட அலுவலர் அவர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முதற்கட்ட பணிகளை மேற்கொள்ள பரிந்துரை செய்து கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்ததின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தேசிய நெடுஞ்சாலையில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளுக்கு தார்தளம் அமைக்க வேண்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கடிதம் மூலம் வரப்பெற்றுள்ளது. மேலும் தேசிய நெடுஞ்சாலை துறையின் மூலம் தார் தளம் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் நலன் கருதி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 750 மீ நீளத்திற்கும் நகராட்சி குறுக்கு சாலைகளில் 14 சந்திப்புகளில் தார்தளம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக க்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மான எண்:660<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 32 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படும் நீரை மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுரையின்படி நீரின் தன்மை தொடர்ந்து கண்காணிக்க OCEMS கருவி (Online continuous Effluent Monitoring System) பொருத்த CGF 2022-2023 திட்டத்தின் கீழ் 48.00 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டு OCEMS கருவி வரப்பெற்றுள்ளது. மேற்படி கருவி சுத்திகரிப்பு நிலையத்தில் பொருத்த நிலத்தடி கேபிள் மற்றும் கருவியின் பாதுகாப்புக்கு மேற்கூரை அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.65,000 /- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக க்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 580/2023/இ1<br>தீர்மான எண்:661<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 33 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31 பாரதிநகர் பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் waste water line இல்லாததால் தண்ணீர் அவ்விடத்திலேயே தேங்கி நிற்கின்றது. இதனால் சுற்றுப்புற சீர்கேடு ஏற்படுகின்றது இதனை சரிசெய்ய கழிப்பிடத்திலிருந்து கோவை மெயின் ரோடு வரை PVC பைப்லைன் பதித்து இதனை சரிசெய்யலாம் இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.55,000/-க்கு மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: 1.மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.குடிநீர் நிதியில் செலவினை மேற்கொள்ள மன்றம் எ அனுமதிக்கலாம்.<br>தீர்மான எண்:662<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

34 மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு 8 சக்திநகர் பூங்கா மத்தியில் அமைந்துள்ள மின்பாதைகளை அருகிலுள்ள சாலையில் புதிய மின்கம்பங்கள் அமைத்து மின்பாதை இடம் மாற்றி பொருத்த மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் ரூ.1,89,350/-யினை செலுத்தவும், வார்டு எண் 22 பெருமாள் லே அவுட் கழிவுநீர் கால்வாய் மத்தியில் அமைந்துள்ள மின்கம்பத்தை இடம் மாற்றி பொருத்த ரூ.16891/-யினை செலுத்தவும், உதவிபொறியாளர் / நகரம்/ மேட்டுப்பாளையம் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கேட்பு அறிக்கையின் படி மொத்தம் ரூ.2,06,241/-யினை மின்வாரியத்திற்கு செலுத்த பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கலாம்**

**2. அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மின் வாரியத்திற்கு தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்**

**தீர்மான எண்:663**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

35 மேட்டுப்பாளையம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP 2023-2024) ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு (ந.க.எண் **4548/2023/இ1**, நாள் **31.05.2023**) **06.06.2023** அன்று தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. **23.06.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இணையதளம் மூலம் ஒரு பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் **5** பணிகளுக்கு **10** ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப உறையினை மற்றும் **26.06.2023** அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டது. எனவே **28.06.2023** அன்று விலைப்புள்ளி உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| **1.** | Improvement to BT roads at Kodalur maariamman kovil road - 074008R088,Mathaiyan layout 2nd st - 074020R200, Mathaiyan layout 3rd st - 074020R201, Mathaiyan layout 4th st - 074020R202, Mathaiyan layout 5th st - 074020R203, Mathaiyan layout 6th st - 074020R204, Railway station road to bus stand - 074024R259, Railway station road to bus stand - 074024R259, Parry company road c/s street 3 Right side - 074023R250 ,Sk Samy layout - 074023R241,velumani layout - 074023R242,Housing unit -2 Street - 074032R369, Ramathal layout left side c/s 1 - 074028R312,Ramathal layout left side c/s 2 - 074028R313,Ramathal layout left side c/s 3 - 074028R314, Aanaikara street -074006R046, Sathyamoorthy Nagar main road - 074007R063, Palaniappa layout 1st st - 074008R077, Palaniappa layout 2nd st - 074008R078, Palaniappa layout 3rd st - 074008R079,Palaniappa layout 4th st - 074008R080, Sudha colony cross street -1 - 074023R245 ,Sudha colony cross street -2 - 074023R246, Sudha colony cross street -3 - 074023R247,Sudha colony main road near parry company road - 074023R244,venkudusamy street - 074015R163 | **132.00** | திருவாளர் ஸ்ரீ அசோசியேட்ஸ் | **0.01%** மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. D. ராஜ்குமார் | **7.50%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | | |
| **2.** | Improvement to BT roads at Uppupallam 1st st - 074008R089, Uppupallam 2nd st -074008R090, Uppupallam 3rd st - 074008R091,Uppupallam 4th st - 074008R092 ,Uppupallam 5th st - 074008R093 ,Sakthi nagar 3rd cross street 2 - 074020R211, Sakthi nagar 5th st - 074020R212, Sakthi nagar 6th st - 074020R213, Sakthi nagar 7th st - 074020R214, Gandhipuram -1 Street - 074025R272, Gandhipuram -2 Street - 074025R273,Gandhipuram -3Street - 074025R274,Yesuthurai street 3 - 074001R003, Poothukan maariamman kovil road - 074008R082, vasantham Nagar 1st st - 074028R302,vasantham Nagar 2nd st - 074028R303, vasantham Nagar 3rd st - 074028R304, vasantham Nagar 4th st - 074028R305,vasantham Nagar Park Back side road - 074028R306 | **118.00** | திருவாளர் வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன் ஸ் | **0.01%** மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் மீனாள் & Co | **4.95%** மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | Improvement to BT roads at Ponnan sandhu 1st - 074009R109, Sakthi nagar 2nd st - 074008R098, Sakthi nagar 3rd st - 074008R099,Rajapuram Main road and mokkai - 074014R153, Borey Gowder main road - 074018R177,Borey Gowder street cross street 1-074018R179, Perumal layout cross street -4 - 074022R232, Jaganathan layout - 074022R233,Ramdoss layout 1st st - 074029R323 ,Ramdoss layout 2nd st - 074029R324, Ramdoss layout 3rd st - 074029R325, Ramdoss layout 4th st - 074029R326, Ramdoss layout 5th st - 074029R327,Shanthi nagar right c/s 6 - 074030R350, PERUMAL LAYOUT main road 074022R228 ,Borey Gowder street cross street 4-074018R182 | 141.00 | திருவாளர் VRK கன்ஸ்ட்ரக்ஷன் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. M.K. செல்வா | 5.17% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4. | Improvement to BT roads at Bharathi nagar near railway track 074031R362Borey Gowder street main cross st 074018R178, Borey Gowder street cross street 3 074018R181,Kendiyur cross st 074021R218 at Mettupalayam Municipality. | 31.30 | திருவாளர் VRK கன்ஸ்ட்ரக்ஷன் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. M.K. செல்வா | 5.16% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5. | Renewal of CC Road in Thaneer thurai main road 074001R002, Subash colony Cross street 074001R011,Nanjaya colony 074001R013,Old market Road cross street -1074005R036,Old market Road cross street -2 074005R037,Sakkariya st 074006R039,SM Nagar school to nellithurai d road 074006R041,Maithanam mariamman kovil area 074006R042,wine shop street 074006R043,Aathupalam Near 074006R044,Mahajana school Road 074006R045,Ramasamy cross street -1 074006R048, Ramasamy layout cross street -2 (ration shop) 074006R049,Sathyamoorthy Nagar madheswaran temple 074007R064,Sathyamoorthy Nagar 1st st 074007R065,Sathyamoorthy Nagar 2nd st 074007R066, Sathyamoorthy Nagar 3rd st 074007R067,Sathyamoorthy Nagar 4th st 074007R068,Sathyamoorthy Nagar 5th st 074007R069,Sathyamoorthy Nagar 6th st 074007R070,Sundara Vinayagar Street 074010R117,Pakkukara street cross street 1074010R118,Pakkukara street cross street 2074010R119,MSR Puram main road 074012R122,MSR Puram 1st st 074012R123,MSR Puram 2nd st 074012R124,MSR Puram 3rd st 074012R125,MSR Puram 4th st 074012R126,sankar nagar school c/s 074013R147,,Kamaraj nagar street 5 074019R197,Nadar colony 4th st 074020R209,,near kiruba hospital 074023R243,christian colony near Bridge 074024R263,Gandhipuram -4Street 074025R275 | 197.00 | திருவாளர் VRK கன்ஸ்ட்ரக்ஷன் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. M.K. செல்வா | 5.13% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் பணிகளை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்**:664

**தீர்மானம்** : **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**